# தெய்வீக சுகமளித்தல்

## 2

சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

Bro. Branham:

~~~~~~~~

எனவே தெய்வீக சுகமளித்தலை விசுவாசிக்கும் ஒவ்வொரு நபரும் வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கும்படிக்கு உரிமையைப் பெற்றிருக்கிறார்கள். ஆம், அது ஒரு பொதுவான ஒழுங்குமுறை.

~~~~~~~~

செய்தி: எதிர்பார்ப்புகள்,
54-0228A

தேவன் இசை மூலமாக சுகமளிக்கிறார்.

தேவன் அன்பினால் சுகமளிக்கிறார். பாருங்கள்? மருந்துகளின் மூலமாக தேவன் சுகமளிக்கிறார். ஜெபத்தின் மூலமாக தேவன் சுகமளிக்கிறார். சுகமாக்குவதற்கு தேவன் அநேக வழிகளை வைத்துள்ளார். அதில் எவ்வகையானது உங்களுக்குத் தேவையோ அதைப் பொறுத்தது.

*செய்தி: கவனி, 63-0428*

இப்போது, முதலில் நீங்கள் அதை ஏற்றுக் கொண்டு, அதை விசுவாசித்து, அறிக்கை செய்யும் வரை, அவர் உங்களை சுகப்படுத்த முடியாது, அல்லது அவர் உங்களை இரட்சிக்க முடியாது அல்லது உங்களுக்காக ஒன்றும் செய்ய முடியாது. அது சரியே. நீங்கள் அதை அறிக்கை செய்ய வேண்டும். நீங்கள் அதை உணர வேண்டும் என்றல்ல, நீங்கள் அதை அறிக்கை செய்ய வேண்டும். உங்களுடைய உணர்ச்சிகளுக்கு அவர் பிரதான ஆசாரியனாக இல்லை; உங்கள் அறிக்கையின் மீது – நீங்கள் அறிக்கை செய்யும் காரியத்தின் மீது அவர் பிரதான ஆசாரியனாயிருக்கிறார் (அது சரி).

*செய்தி: உம்முடைய வார்த்தையின் படியே, கர்த்தாவே, 54-0221, பத்தி எண் E-32*

# இராப்போஜனம்

தெய்வீக சுகமளித்தல் என்பது இராப்போஜனத்தில் இருக்கிறது என்பதை அறிவீர்களா? இஸ்ரவேல் ஜனங்கள், இராப்போஜனத்திற்குச் சாயலாக அப்பம் புசித்து, நாற்பது வருஷம் யாத்திரை செய்தார்கள்... அவர்கள் வனாந்தரத்திலிருந்து வெளியே வந்த போது, அவர்களில் ஒருவனும் பலவீனமாயிருந்த தில்லை: இருபத்தைந்து இலட்சம் பேர்கள். இராப்போஜனத்தில் சுகமாக்கும் வல்லமையுண்டு.

*செய்தி: பிரதிஷ்டை, 62-1104 E, பத்தி எண் E-27*

உங்களுடைய சபையில் சேர்தலை தேவன் கனப்படுத்துவதில்லை; உங்களுடைய விசுவாசத்தை அவர் எதிர்பார்க்கிறார், அவருக்குள் இருக்கிற உங்களுடைய விசுவாசத்தைக் கனப்படுத்துகிறார். அவர்… சுகம் – சுகமாக்கப்படுவதற்கு நீங்கள் ஒரு கிறிஸ்தவனாகக் கூட இருக்க வேண்டுவதில்லை, ஆனால் நீங்கள் சுகத்தில் தரித்திருப்பதற்கு, நீங்கள் கிறிஸ்தவராக மாற வேண்டும். "நீ போ, இனிமேல் பாவம் செய்யாதே, அல்லது இதைக் காட்டிலும் கொடியது உன்மேல் வரும்."

*செய்தி: தேவன் அவருடைய ஜனங்களுக்குள், 50-0227, பத்தி எண் E-4*

தேவன் உங்களை (பரம) வீட்டுக்குச் செல்ல அழைப்பாரென்றால், இன்றிரவில், இங்கே உங்களைப் பிடித்து வைப்பதற்கு, இந்த உலகத்தில் போதுமான மருந்துகள் இல்லை. உங்களை இங்கே பிடித்து வைப்பதற்கு ஒன்றுமே இருக்கப்போவதில்லை. அவர் நீங்கள் பூமியில் இருக்க வேண்டும் என்று தீர்மானித்தால், இன்றிரவில் நீ மரித்து விடுவாய் என்று எத்தனை மருத்துவர்கள் கூறினாலும், நீங்கள் மரிக்கப்போவதில்லை. ஆகவே எலலாமுமே தேவனைச் சார்ந்துள்ளது.

*செய்தி: ஐயன்மீர், நாங்கள் இயேசுவைக் காண விரும்புகிறோம், 64-0304, பத்தி எண் 11*

ஒரு மனிதனை ஆளுகை செய்வதற்கு இரண்டு அதிகாரங்கள் மட்டுமே உள்ளன. அவைகளில் ஒன்று விசுவாசம், அது நல்ல பலனைக் கொண்டு வரும்; மற்றொன்று பயம், அதற்குள் ஒரு மதிப்பும் கிடையாது. விசுவாசம் தேவனுடையது. பயம் பிசாசினுடையது.

*செய்தி: ஐக்கியம் கொள்வதற்கான வழி, 55-1009, பத்தி எண் E-26*

இரட்சிப்பு எவ்வாறு எல்லோருக்கும் சொந்தமோ, அது போல, தெய்வீக சுகமளித்தலும் விரும்புகிற யாவருக்கும் உரியது. அது ஏற்கனவே செய்து முடிக்கப்பட்ட கிரியையாகும், கர்த்தராகிய இயேசுவின் கொடூரமான பாடுகளிலும், அவருடைய ஜெயமான உயிர்த்தெழுதலிலும் நாம் கொண்டுள்ள விசுவாசத்தின் மூலம் நாம் அதை ஏற்றுக் கொள்கிறோம்.

செய்தி: சாலமோனைக் காட்டிலும் பெரியவர் இங்கே இருக்கிறார், 57-0228, பத்தி எண் E-5

யாரோ ஒருவர், “சுகமாக்கப்படுதல் நிரந்தரமா?” என்று கேட்டார்.

விசுவாசம் நிலைத்திருக்கும் மட்டும், சுகமாக்கப்பட்டதும் நிலைத்து நிற்கும். ஆனால், விசுவாசம் தோல்வியடையும் போது, உங்களுக்குக் கிடைத்த சுகமாக்கப்படுதலையும் இழந்து விடுவீர்கள்.

*செய்தி: வியாதிகளும் உபத்திரவங்களும், 50-0100, பத்தி எண் 26*

# யாராலும் எவ்வளவு பெரிய நோயிலிருந்தும் சுகம்பெற ஒரு பெரிய பரம இரகசியம் இதோ!



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

## 1 பேதுரு 2:24

**நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்.**

*செய்தி:* **தேவனுடைய வெகுமதியை ஏற்றுக் கொள்ளுங்கள்**, 53-0219, பத்தி எண் 9

இப்பொழுது, சுகமாகுதல் என்பது நீங்கள் வெறுமனே, "நல்லது, நான்... ஆமாம், நான் அதை விசுவாசிக்கிறேன். நான் அதை விசுவாசிக்கிறேன்" என்று கூறும் ஏதோவொன்றல்ல. இப்பொழுது, அதெல்லாம் சரிதான். **அதுதான் நீங்கள் செய்யக் கூடிய சிறந்த காரியமாக இருந்து,**

வெறுமனே மனதில் சிந்தித்தோ அல்லது வெறுமனே, "நல்லது, நான்... ஆமாம், நான் – நான் அதைக் காண்கிறேன். நான் அதை விசுவாசிக்கிறேன்; நான் அதை ஏற்றுக் கொள்கிறேன்" என்று கூறுவீர்களானால். அதன்பிறகு நீங்கள் அதை அந்த அடிப்படையில் ஏற்றுக் கொள்வீர்களானால், தொடர்ந்து இடைவிடாமல் மீண்டும் மீண்டும் அதையே கூறிக் கொண்டிருங்கள். அதை உரத்த சத்தமாகக் கூறுங்கள். மீண்டும் மீண்டும் அதையே கூறிக் கொண்டிருங்கள்; அப்படியே தொடர்ந்து, "நான் சுகமானேன். நான் சுகமானேன்" என்று கூறிக் கொண்டிருங்கள். நீங்கள் உண்மையாகவே அதை விசுவாசிக்கும் மட்டுமாக அதையே கூறிக் கொண்டிருங்கள். நீங்கள் அதை விசுவாசிக்கும் போது, அப்பொழுது தான் அது சம்பவிக்கப் போகிறது.

நீங்கள் ஒரு எதிர்மறையான சாட்சியைக் கொண்டிருக்க வேண்டாம். நீங்கள், "நல்லது, நான் இன்னும் இன்றைக்கும் மோசமாகவே உணருகிறேன். நான் நினைக்கிறேன் நான்..." என்று அறிக்கை செய்யும் ஒவ்வொரு தடவையும். நீங்கள் சரியாக தொடக்கத்தில் இருந்த அதே குழியில் மீண்டும் நேராகப் போய் விடுவீர்கள்.

# நான் வயிற்றுக் கோளாறிலிருந்து சுகமடைந்தது எனக்கு ஞாபகம் வருகிறது



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: விசுவாசிக்க மாத்திரம் செய், ஏப்ரல் 27, 1961, சிகாகோ, இல்லினாய்ஸ், அமெரிக்கா

7. நான் வயிற்றுக் கோளாறிலிருந்து சுகமடைந்தது எனக்கு ஞாபகம் வருகிறது. அவன் – சாத்தான், “நல்லது, உன்னால் நன்றாக சாப்பிட முடியாது” என்றான். “ஏனெனில், மருத்துவர், ‘நீ சாப்பிடுவாயானால் மரித்து விடுவாய். உன்னுடைய வயிறு புண்ணாயுள்ளது, அது ஒரு பெரிய

படுமோசமான அல்சர்' என்று கூறியுள்ளார்" என்றான்.

**ஆனால் கர்த்தரோ, அவர் என்னை சுகமாக்கி விட்டதாக கூறினார்.** எனவே நான் வேறு யாரோ ஒருவருடைய வார்த்தைக்குச் செவி கொடுக்க வேண்டியிருந்தது, இந்நிலையில், நான் – **நான் தேவனுடைய வார்த்தைக்குச் செவி கொடுத்தேன்.**

ஓ, அவ்வாறு அது என்னை சாகடித்துக் கொல்வது போன்றிருக்கும். நான் அப்படியே... வெந்நீர் என்னுடைய வாயிலிருந்து வெளியே வந்து கொண்டிருக்கும்,

எனவே, இரண்டு அல்லது மூன்று நாட்கள் என்னுடைய வயிற்றை இவ்விதமாகப் பிடித்துக் கொண்டே சுற்றிச் சுற்றி போய்க் கொண்டிருப்பேன். "திரு. பிரன்ஹாம் அவர்களே, நீங்கள் எவ்வாறு உணருகிறீர்கள்?" என்று கேட்டார்.

நான் இவ்விதமாக சீற்றத்தோடு (tamping away), "ஓ, நான் அருமையாக உணருகிறேன்" என்றேன்.

யாரோ ஒருவர், "நீ பொய் சொல்லுகிறாய்" என்றார்.

**நான் பொய் சொல்லவில்லை, நான் அறிக்கை செய்து கொண்டிருந்தேன்.** அறிக்கை செய்தல் என்பது "அதே காரியத்தையே திரும்பச் சொல்லுதல்." **அவருடைய தழும்புகளால் நான் குணமானேன்.** எனவே அது... அது அதைச் செய்கிறது. பாருங்கள்? நான் அறிக்கை செய்து கொண்டிருந்தேன்.

எனவே, சாத்தான் என்னிடம் கூறினான், "நீ நிந்தையை வருவிக்கிறாய்" என்றான்.

**8.** நான், "இப்பொழுது, இங்கே பார், பையனே. நான் சாட்சி

கூறுவதைக் கேட்டு நீ சந்தோஷப்படுவாயானால், அது நடப்பதை எதிர்நோக்கி இதேயிடத்தில் தங்கியிரு. ஆனால் உனக்கு கேட்க பிடிக்கவில்லையெனில், நீ அப்பாலே போ, அதுவே நல்லது, ஏனெனில் நான் – நான் எப்படியாயினும் சாட்சிகூறத்தான் போகிறேன்" என்றேன். எனவே அது தான் இது. **நீங்கள் எந்தப் பக்கம் நிலைத்து நின்று கொண்டிருக்கிறீர்கள் என்பதை அவன் அறியும்படி நீங்கள் செய்ய வேண்டும், பிறகு அசையாமல் இருங்கள், அப்போது நிலைத்து நிற்கிறீர்கள்.**

அந்தவிதமாகத்தான நாம் எப்போதுமே செய்ய வேண்டும், நாம் சரியென்று அறியும் இடத்திற்கு வர வேண்டும், பிறகு அதில் விசுவாசம் கொண்டிருக்க வேண்டும். நீங்கள் சரியாக இல்லையென்றால், உங்களுக்கு விசுவாசம் இருக்க முடியாது. இப்பொழுது அவனிடம் வெற்று வீம்பு பேச்சு பேச முயற்சிக்க வேண்டாம். உங்களுடைய வீம்பு பேச்சுக்களை அவன் எடுத்துக் கொள்ள மாட்டான். பாருங்கள்? அவனிடம் வீண்பேச்சு பேச வேண்டாம். ஆனால் நீங்கள் உண்மையாகவே

விசுவாசிக்கும்போது, நீங்கள் வீண்பேச்சு பேச மாட்டீர்கள். **ஏதோவொன்று ஏற்கனவே உங்களுக்கு சாட்சி கொடுக்கும்**, பிறகு நீங்கள் – அதன்பிறகு நீங்கள் சரியாக இருக்கிறீர்கள்.

எனக்குக் கவலையில்லை, யாருமே உங்கள் மேல் ஒரு போதும் கைகளை வைக்காமல் இருக்கலாம். நீங்கள் ஒருபோதும் எதையும் கேட்காமல் இருக்கலாம்; **ஆனால் அது தேவனுடைய வார்த்தை என்றும் அது உங்களுக்கான தேவ சித்தம் என்றும் உங்களுடைய இருதயத்தில் அதை உறுதிப்படுத்தும் ஏதோவொன்று**

**இருக்கும் காலம் வரை, தேவையானது அவ்வளவுதான்.** அநேக நேரங்களில், இந்த வரங்களும் காரியங்களும் சற்று உற்சாகப்படுத்துகின்றன.

★★★★★

# குருடான ஜான் ரையான் பார்வையடைதல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# 2

*செய்தி:* **விசுவாசமானது ஆறாவது புலனாகும்**, *ஜுன் 11, 1960*

37. இங்கே போர்ட் வேய்னில் (Fort Wayne) வயதான ஜான் ரையானை (John Ryan) நீங்கள் நினைவில் கொண்டுள்ளீரா? தாடி வைத்திருக்கும் மனிதன் அல்ல, வேறொரு குருடரான ஜான் ரையான். அங்கே பெரிய கூடாரத்திலே ஒரு கூட்டத்தை நான் நடத்திக் கொண்டிருந்தேன். நான் முடித்த பிறகு வியாதியஸ்தருக்காக ஜெபிக்க சென்று கொண்டிருந்தேன். இந்த மனிதன் மேலே மாடியின் முன் பாகத்தில் அமர்ந்திருந்தார். அவர் ஒரு கத்தோலிக்கராய் இருந்தார். அவர் வைத்திருந்த அட்டையின் மூலம் அவரை மேடையின் மேல் இருந்த பீடத்தின் அருகே கொண்டு வந்தனர்.

நான் இருந்த இடத்திற்கு அவர் வந்தபோது, "உம்முடைய பெயர் ஜான் ரையான்" என்று கூறினேன்.

"அது சரி"

"நீர் விசுவாசத்தில் ஒரு கத்தோலிக்கன்."

அவர், "அது சரி" என்றார்.

“நீர் சர்க்கஸில் வாகனம் ஓட்டுவது வழக்கமல்லவா?”

“அது சரி” என்று கூறினார்.

“பிறகு நீங்கள் இருபது வருடங்கள் அல்லது அதற்கு மேலாக குருடராய் இருக்கிறீர்கள்”.

அவர், “அது சரி” என்று கூறினார். லியுகேமியா அல்லது வேறெதோ ஒரு வியாதி அவருடைய கண்ணிற்குள் சென்று அவரை குருடாக்கியது. நான் கூறினேன், “நீர் ஒரு பிச்சைக்காரர்”

“முற்றிலுமாக ஒரு பிச்சைக்காரன் அல்ல, நான் தெருக்களில் உட்கார்ந்து கொண்டிருப்பேன்” என்று அவர் கூறினார்.

நான் கூறினேன், “நல்லது, அது சரி, இயேசு கிறிஸ்து உங்களை சுகப்படுத்துவார் என்று நீர் விசுவாசிக்கிறீரா?”

“நான் விசுவாசிக்கிறேன்” என்று கூறினார்.

“கர்த்தராகிய இயேசுவே, நான் இந்த குருட்டுத்தனத்தை இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே இப்பொழுது நான் கடிந்து கொள்கிறேன். அது இவரை விட்டு நீங்கட்டும்” என்று அவருக்காக ஜெபித்து கரங்களை அவர்

மீது வைத்தேன். நான் திரும்பி பார்த்தபோது தன் பார்வையை பெற்றவராய் நடந்து செல்வதை நான் கண்டேன். நான் "**கர்த்தர் உரைக்கிறதாவது**" (நீங்கள் அதை கவனியுங்கள்) - **கர்த்தர் உரைக்கிறதாவது**, நீங்கள் உங்கள் பார்வையை பெற்றுக் கொண்டீர்" என்று கூறினேன்.

நல்லது, "அவர் என்னால் பார்க்க முடியவில்லை" என்று கூறினார்.

நான், "அதனுடன் செய்வதற்கு ஒன்றுமில்லை. துதித்துக் கொண்டு உங்கள் வழியில் செல்லுங்கள்" என்று கூறினேன். ஆகையால் அவர் சென்றுவிட்டார்.

38 அங்கே இருந்த ஒரு ஸ்திரீக்கு ஒரு பெரிய களகண்ட மாலை கட்டி (goiter) கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. நாங்கள் அவளுக்காக ஜெபித்தவுடன் சில நிமிடங்களில் அது மறைந்து போனது. அங்கே எல்லா உதவியாளர்களையும் தள்ளிக்கொண்டு ஜான் ரையான் மறுபடியுமாக வந்தார். ஜெப வரிசையில் எனக்கு உதவி செய்து கொண்டிருந்த மனிதன் அவரை மேடையிலிருந்து கீழே இறக்க ஆரம்பித்தார். "நான் அந்த பிரசங்கியை பார்க்கவேண்டும்" என்று அவர் கூறினார். ஆகையால் அவரை மறுபடியுமாக

மேலே கொண்டு வந்தனர். அவர் என்னிடம், "நான் சுகமடைந்துவிட்டேன் என்று நீர் என்னிடம் கூறினீர் அல்லவா?" என்று கூறினார்.

"நீங்கள் சுகமடைந்தீர்கள்" என்று கூறினேன்.

அவர், "நல்லது, நான் சுகமடைந்திருந்தால் என்னால் பார்க்கக் கூடுமே" என்று கூறினார்.

நான் கூறினேன், "ஓ, அதனுடன் செய்தற்கு எதுவுமில்லை. நீர் என்னிடம் கூறினீர்..."

அவர், "நல்லது நான் சுகமடைந்தேன் என்று நீங்கள் கூறினீரே" என்றார்.

நான் கூறினேன், "நீர் என்னை விசுவாசிப்பதாகக் கூறினீரல்லவா?"

அவர், "நான் உம்மை விசுவாசிக்கிறேன்" என்றார்.

நான் கூறினேன், "அப்படியென்றால் எதைக் குறித்து நீர் சந்தேகிக்கின்றீர்?"

அவர், "நல்லது நான் சுகமடைந்திருந்தால், என்னால் பார்க்கக் கூடும் அல்லவா?" என்றார்.

நான், "நீர் பார்வை அடைவீர், நீர் பார்வையை உடையவராக இருப்பதை தேவன் எனக்கு தரிசனத்தில் காண்பித்திருக்கின்றார்

என்றால் அது நடந்தாக வேண்டும்" என்றேன். அவர் ஒரு கத்தோலிக்கராயிருந்ததால் இதைப் போன்ற ஒன்றைக் குறித்து அவருக்கு போதிக்கப்படவில்லை.

அவர், "அதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. நான் என்ன செய்ய வேண்டும்" என்றார்.

நான் கூறினேன், "நல்லது, நீர் செய்ய வேண்டிய காரியம் என்னவென்றால் தேவன் உமக்கு பார்வையை அளித்தார் என்று உங்கள் பாதையில் அவரைத் துதித்துக் கொண்டே செல்லுங்கள்".

அவர் தள்ளிக் கொண்டே முன் வந்து, "நீங்கள் எங்கிருக்கிறீர்கள்? ஒரு நிமிடம் பொறுங்கள். உங்கள் பெயர் என்ன?" என்றார்.

"பிரான்ஹாம்" என்று நான் கூறினேன்.

"உம்மை நான் தொட்டுப் பார்க்கவேண்டும்" என்று கூறினார். அவர் தனது கைகளால் என்னைத் தொட நான் விட்டேன். அவர் திரு. பிரான்ஹாம் அவர்களே, நான் ஒரு கத்தோலிக்கனானதால் என்னுடைய பாதிரியாரை விசுவாசிக்க மாத்திரம் கற்பிக்கப்பட்டுள்ளேன். நான் உம்மிடம் உதவிக்கு வந்துள்ளேன். நான் யாரென்றும், என்னுடைய

நிலைமைகள் என்னவென்றும் நீர் என்னிடம் கூறினீர். யாரும் அறியாததை தேவன் அறிவார். அது உண்மை என்று நான் விசுவாசிக்கிறேன். ஆதலால் "தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்று நான் கூறிக் கொண்டே இருப்பேன் என்று கூறினார். மேடையிலிருந்து அவர் இறங்கிச் சென்றார்.

39 அடுத்த இரண்டு இரவுகள் என்னால் பிரசங்கிக்கக் கூட முடியவில்லை. நான் இருந்த இடத்தில் அவர் எழுந்து "என்னை சுகப்படுத்தினதற்காக, கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக" என்பார். நான் பிரசங்கிக்க ஆரம்பிக்கும்போது "என்னை சுகப்படுத்தினதற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று சத்தமிடுவார்.

செய்தித்தாள்களை விற்கும் பணியை அவருக்கு அளித்திருந்தார்கள். ஏறக்குறைய ஒரு மாதம் சென்றுவிட்டிருந்தது. அவர் "என்னை சுகப்படுத்தினதற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று சத்தமிட்டுக் கொண்டிருந்தார். அவர் அங்கே, "கர்த்தர் என்னை சுகப்படுத்தினதற்காக கூடுதலான ஸ்தோத்திரம்" என்று சத்தமிட்டார். அவரைப் பார்த்து சிரித்து அவரை கேலி செய்தனர். சிறிய செய்தித்தாள் விற்கும் பையன்கள் அவரைப் பார்த்து "உஸ்" என்று சத்தமிட்டு பரியாசம் செய்தனர்.

தெருக்களில் உள்ள மக்கள், “அந்த வயதான மனிதனுக்கு மூளை குழம்பிவிட்டது” என்றனர்.

அவர் “என்னை சுகப்படுத்தினதற்காக கர்த்தருக்கு கூடுதலான, கூடுதலான ஸ்தோத்திரம், இதைப் படியுங்கள்: என்னை சுகப்படுத்தினதற்காக “கர்த்தருக்கு ஸ்தோத்திரம்” என இன்னுமாக அவர் கூறிக் கொண்டிருந்தார்.

40 அவரைக் கொண்டு சென்றனர் (அவரை மனநோய் காப்பகத்திற்கு அனுப்ப வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தனர்) அங்கே அவரை கேள்விகள் கேட்டனர். அதற்கு அவர், “நான் எப்போதும் இருப்பதைப் போன்றே என் மனநிலையும் சரியாக இருக்கின்றது. ஆனால் நான் தேவனை விசுவாசிக்கிறேன். என்னை சுகப்படுத்தினதற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம்” என்று கூறிக் கொண்டிருந்தார். அதுஎன்ன? அவர் அந்த ஆறாவது புலனைப் பிடித்துக் கொண்டிருந்தார். அவருக்குள் இருந்த ஏதோ ஒன்று அதைப் பிடித்துக் கொண்டிருந்தது. அவரால் காண முடிகின்றதோ, இல்லையோ, அவர் எந்த கவனத்தையும் செலுத்தவில்லை, அந்த பார்வைக்குரிய காரியம் அதனுடன் (ஆறாவது புலனுடன் - தமிழாக்கியோன்) செய்வதற்கு ஒன்றும் இல்லை. அவர் வேறொரு பார்வையை

உடையவராய் இருந்து அதன் மூலமாக அவர் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் தேவனைப் பார்த்துக் கொண்டிருந்தார். நாம் பார்க்கக் கூடாதவைகளை பார்த்துக் கொண்டிருக்கிறோம். எல்லாக் கிறிஸ்தவ போர்க் கவசமும் விசுவாசத்தினால் ஆனது. தேவனிடத்தில் வருகின்ற ஒருவன் அவர் தேவன்தான் என்பதை விசுவாசிக்க வேண்டும். ஆவியின் கனிகள் ஒவ்வொன்றும், மற்ற எல்லாக் காரியங்களும், காணப்பட முடியாத விசுவாசமே ஆகும். காணக்கூடாததை, விசுவாசத்தின் மூலம் நாம் காண்கிறோம். அல்லேலூயா!

41 அவர் சவரம் (ஷேவ்) செய்து கொள்ளதக்கதாக ஒரு சிறு பையன் அவரை அந்த தெருவிற்கு அப்பால் இருந்த முடித்திருத்தக் கடைக்கு கூட்டிச் சென்றான். அங்கே இருந்த முடி திருத்துபவன் ஒருவன் அவரை கிண்டல் செய்ய எண்ணினான். ஆகவே அவருடைய முகம் முழுவதும் சோப்பை தடவினான். மற்ற முடி திருத்துபவர்கள் அவனைப் பார்த்து அதைப் போன்று கண் அடித்தனர். அவன் கூறினான். அவருக்கு ஒரு பக்கத்தில் சவரம் செய்து முடித்தான்; டவலை முகம் துடைக்கும் துணியை

அங்கு வைத்தான். அவன் கூறினான்: “பெரியவர் ரையான் அவர்களே”,

அவர், “ஆம் மகனே” என்றார்.

“அங்கே மேலே அந்த பரிசுத்த உருளையன் வந்த போது அவனை காண நீங்கள் சென்றீர்கள் என்று கேள்விப்பட்டேன்” என்றான்.

“ஆம், நான் சென்றேன்”, என்றார்.

“நீங்கள் சுகமானதாக நான் கேள்விப்பட்டேன்” என்று கூறினான்.

அதற்கு அவர், “ஆம் நான் சுகமானேன். என்னை சுகப்படுத்தினதற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம்” என்று கூறினார். **அவ்வாறு அவர் கூறின மாத்திரத்தில் அந்த முடிதிருத்தக் கடையின் நாற்காலியிலேயே அவர் கண்கள் திறக்கப்பட்டது.** தன் கழுத்தைச் சுற்றி டவல் சுற்றப்பட்ட நிலையில் அவர் நாற்காலியை விட்டு குதித்தெழுந்து ஓட ஆரம்பித்தார். சவரம் செய்பவன் தன் கையில் உள்ள கத்தியுடனே பின்னாலே கதவிற்கு நேராக ஓடினான். இந்த வயதான மனிதனாகிய ரையான் தன்னால் எவ்வளவு இயலுமோ அவ்வளவு சத்தமாக “கர்த்தருக்கு ஸ்தோத்திரம், அவர்

என்னை சுகப்படுத்திவிட்டார்” என்று கூச்சலிட்டுக் கொண்டும், சத்தமிட்டுக் கொண்டும் தெருவில் ஓடினார்.

42 அது என்ன? அந்த ஆறாவது புலனை பற்றிக் கொண்டிருத்தல். ஏதோ ஒன்று அதை உண்மையாக்கிவிடுகின்றது. ஆம் ஐயா. இந்த ஆறாவது புலனின் மூலம் இராஜ்ஜியங்கள் ஜெயிக்கப்பட்டன. ஆமென். ஆறாவது புலன் இராஜ்ஜியங்களை ஜெயம் கொள்ளச் செய்தது. இந்த ஆறாவது புலனின் மூலமாகத்தான் எரிகோவின் மதில்கள் தரைமட்டமாக்கப்பட்டன. ஆமென். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? ஆறாவது புலனின் மூலமாகத்தான் எரிகோவின் மதில்கள் தரையில் விழுந்தன.

இந்த ஆறாவது புலனின் மூலமாகத்தான் பவுலை கடல் விழுங்கக் கூடாதபடிக்கு ஆனது. எல்லா நம்பிக்கையும் அற்றுப் போன நிலையில் அவன் அங்கே இருந்தபோது கர்த்தருடைய தூதனை அவன் தரிசனத்தில் கண்டான். அவன் திரும்பி வந்து “தைரியமாயிருங்கள்” என்று கூறினான். காரணம் என்ன? இரவும் பகலுமாக பதினான்கு நாட்கள் சந்திரனோ, நட்சத்திரங்களோ, எதுவுமே இல்லாமல் மிகவுமாக இருண்டு போயிருந்தது. எப்பொழுதும் இல்லாத அளவிற்கு

புயல் பயங்கரமாக இருந்தது. ஆனால் அவன் கர்த்தருடைய தூதனை அவன் கண்டபொழுது அந்த ஆறாவது புலன் கிரியை செய்ய ஆரம்பித்தது. அல்லேலூயா.

அந்த ஆறாவது புலனால் பேதுருவை சிறைச் சாலையில் வைக்க இயலவில்லை. இல்லை ஐயா. தேவனுடைய வல்லமையானது ஒரு தூதனை அங்கே அனுப்பி அவனை விடுவித்தது.

அந்த ஆறாவது புலனால் பவுலையும் சீலாவையும் தொழு மரத்தில் வைக்க இயலவில்லை. தேவன் பூமி அதிர்ச்சியை அனுப்பி எல்லாவற்றையும் முழுமையாக அசைத்துப் போட்டார்.

அந்த ஆறாவது புலன் சில நேரத்திற்கு உங்களுக்காக கிரியை செய்ய விடுங்கள். ஏனென்றால் அந்த ஆறாவது புலனின் காரணத்தால் தானியேலை சிங்கங்களாலும் கூட விழுங்க முடியவில்லை. அந்த ஆறாவது புலனிற்கெதிராக அவைகளால் ஒன்றுமே செய்ய இயலவில்லை. இல்லை ஐயா.

அந்த ஆறாவது புலனின் காரணத்தால் நெருப்பு எபிரேயப் பிள்ளைகளை பட்சிக்கக் கூடாமல், எரிக்கக் கூடாமல் இருந்தது.

மார்த்தாளுக்குள் கிரியை செய்து கொண்டிருந்த அதே ஆறாவது புலனின் மூலமாகத்தான் மரித்து நான்கு நாட்களாய் கல்லறைக்குள் கிடந்த தன் சகோதரனை இயேசு உயிரோடு எழுப்புவதைக் காண (மார்த்தாள் - தமிழாக்கியோன்) வந்தாள்...

அதே ஆறாவது புலன் ஒரு குஷ்டரோகியை சுகமாக்கினது. அதே ஆறாவது புலன்தான் இயேசு கிறிஸ்துவை மூன்றாம் நாள் உயிரோடு எழுப்பினது. அதே ஆறாவது புலன்தான் என்றாவது ஒரு நாளிலே சபையை எடுத்துக்கொண்டு, மகிமைக்குள்ளே கொண்டு செல்லும்.

*(இந்த மேற்கோள் ஏற்கனவே தமிழில் வந்த செய்தியிலிருந்து எடுக்கப்பட்டது.)*

பிறகு அவள் காலூன்றி நின்று,
சுகமாக இருப்பதை உணர்ந்தாள்.
அவள் கைகளை உயர்த்தி தேவனைத்
துதிக்க ஆரம்பித்தாள்



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

செய்தி: **விசுவாசமானது ஆறாவது புலனாகும்**

Chatauqua, Ohio, USA
60-06-11E

---

**7.** ஒரு சமயம், ஒருவன் என்னிடம் வந்து என்னை குருடாக்கு பார்க்கலாம். நீர் தெய்வீக சுகமளித்தலை, பவுல் பிரசங்கித்த அதே பரிசுத்த ஆவியை நம்புகிறீர், "என்னை குருடாக்கு" என்றான்.

நான் கூறினேன், "என்னால் அதைச் செய்ய இயலாது.

ஏனென்றால் ஏற்கனவே நீ குருடாய் இருக்கிறாய்". நான் மேலும், "உன் பிதாவாகிய பிசாசு நீண்ட காலத்துக்கு முன்பே அதை உனக்குச் செய்துவிட்டான். பாருங்கள். நீ.. நீ.. நீ.. நீ... ஏற்கனவே குருடாய் இருக்கிறாய்" என்றேன். அவன் குருடன் என்று வேதம் கூறுகின்றது. இந்த சுவிசேஷமானது யாருக்கு மறைக்கப்பட்டிருக்கிறதோ அவன் குருடனாயிருக்கிறான் என்று வேதம் கூறுகின்றது. ஆகவே தேவன் தங்களுக்கு அளித்த புலன்களை உபயோகப்படுத்தாதவர்கள் தான்

குருடர் ஆவர். அந்த புலனானது (விசுவாசம் – தமிழாக்கியோன்) உபயோகப்படுத்தப்பட்டால் மற்ற ஐம்புலன்களும் தோல்வியுற்றாலும் அது இரட்சிப்பின் புலனாகும். இந்த புலனால் மகத்தான காரியங்கள் நடப்பிக்கப்பட்டிருக்கின்றன.

இங்கே சில நாட்களுக்கு முன்பு என்னுடைய கூட்டங்களில் பிரசங்க மேடையின் மேல் ஒரு ஸ்திரி வந்தாள். அவளுக்கு சீழ்ப்புண் வயிறு (Ulcered Stomach) இருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. பரிசுத்த ஆவியானவர் பேசத் துவங்கினார்.

என்னால் அவ்வாறே செய்ய முடியாது என்பதை அவள் அறிந்திருந்தாள் அவள் யாரென்பதும் எங்கிருந்து வருகிறவள் என்பதையும் கூறினார். அவளுக்கு சீழ்புண் வயிறாய் இருந்தது. பிறகு கடந்து செல்கையில் அது "கர்த்தர் உரைக்கிறதாவது, நீ சுகமாக்கப்பட்டாய்" என்றது. அவள் வீட்டிற்கு சென்றாள்.

8. அங்கு ஒரு ஸ்திரீ இருந்தாள் (ஒலி நாடாவில் காலி இடம் – ஆசி) பக்கத்து இடத்தைச் சேர்ந்தவள். சரியாக

ஜெபவரிசையில் நின்றாள். அங்கு வந்தபோது... அவளுக்கு தொண்டையில் சதை வளர்ச்சி இருந்தது. அப்பொழுது ஜெப வரிசையில் அவள் வரும்போது, அவள் யாரென்பதும், அவள் எங்கிருந்து வருபவள் என்பதையும் மற்ற எல்லாவற்றையும் அது (பரிசுத்த ஆவி – தமிழாக்கியோன்) கூறினது? அவள் ”அது சரியே” என்றாள்.

“கர்த்தர் உரைக்கிறதாவது, நீ சுகமடைந்தாய்” என்று கூறினது. ஆகவே இரு ஸ்திரீகளும் அன்றிரவே ஒன்றாகப் பெற்றுக்

கொண்டு சென்றார்கள். அவர்கள் எந்த வித்தியாசத்தையும் உணரவில்லை.

அதனிடம் (விசுவாசத்தினிடம் – தமிழாக்கியோன்) இவைகளால் (ஐம்புலன்களால் – தமிழாக்கியோன்) கிரியை செய்ய எதுவுமே இல்லை. நீ அப்புலன்களிலிருந்து தூரமாகச் செல்ல வேண்டும். நீ அதன் (ஐம்புலன்கள் – தமிழாக்கியோன்) மேல் சார்ந்திருக்கப் போகிறாய் என்றால் இதன் மேல் உன்னால் சார்ந்திருக்க முடியாது. ஏனென்றால் நீ பார்த்தல், ருசித்தல், உணர்தல்,

முகர்தல், கேட்டல் ஆகியவைகளால் உணரமுடியாத ஒரு சாட்சியாய் அது உள்ளது. அது வேறொரு புலன்.

9. என்ன நடந்தது என்பதை கவனியுங்கள். சுமார் இரண்டு வாரங்கள் கழித்து சீழ்ப்புண் வயிறை உடைய இப்பெண், சாப்பிட முயற்சித்தாள். அவள் மரிக்க விரும்பினாள். ஆனாலும் அவள் நிலைத்திருந்தாள் (விசுவாசத்தில் – தமிழாக்கியோன்) அவள் “இதைக் குறித்து இயற்கைக்கு மேம்பட்ட காரியம் ஏதோ இருக்கிறது? ஏனென்றால் அந்த மனிதன் தன்

ஜீவியத்திலே என்னைக் கண்டதே இல்லை. ஆனாலும் நான் யாரென்பதைக் கூறினார். அது தேவ காரியமாய் இருக்க வேண்டும். ஏனெனில் அது வேதத்துடன் பொருந்துகிறது" என்று கூறினாள். பாருங்கள்? இன்னுமாய் அவள் அம்மனிதனை நான் அறிவேன். அவர் பிரசங்கித்துக் கேட்டிருக்கிறேன், அவர் படிப்பறிவில்லாதவர். இக்காரியங்களைக் குறித்து அவருக்கு ஒன்றுமே தெரியாது. ஆனால் இதைக் குறித்த எல்லாவற்றையுமே கூறிவிட்டார். அந்த மனிதன் "கர்த்தர்

உரைக்கிறதாவது” என்று கூறினார். அவர் தேவனுடைய ஊழியக்காரனாய் இருந்தால் – அவர் நினைத்த ஒன்றைக் கூறியிருக்கமாட்டார். நீ சுகமாக்கப்பட்டாய் என அவர் மூலமாய் பரிசுத்த ஆவியானவர் தான் பேசினார்” என்று கூறினாள்.

அவள் இன்னுமாய் நிலைத்திருந்தாள். அவளுடைய கணவன் ஒரு கிறிஸ்தவன். அவளுடைய பிள்ளைகள். ஆகவே, தொண்டையில் சதை வளர்ச்சியை உடைய அந்த ஸ்திரீயை, தன் சிநேகிதியை சந்திக்க அவள்

அடுத்த தெருவிற்குச் சென்றாள். அவளுக்கும் எவ்வித மாறுதலும் இல்லாதிருந்தது. ஆனால் இருவரும் தங்களுடைய இருதயத்தில் அது தேவன்தான் என்ற நோக்கத்தை உடையவர்களாய் இருந்தனர். எல்லாமே அதுவாகத்தான் இருந்தது.

10. ஒரு நாள் காலை பிள்ளைகள் பள்ளிக் கூடத்திற்குச் சென்றுவிட்டிருந்தனர். அவள் நின்றுக் கொண்டு பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்தாள். அவளால் எதுவுமே உண்ண

முடியாதிருந்தது. ஏனெனில் அந்த சீழ்ப்புண் வயிறு வியாதியானது (Ulcer) அவளை எரித்து விட்டிருக்கும். அவள் பாத்திரங்களை கழுவிக்கொண்டு இருக்கையில் திடீரென்று குளுமையாக, "சில்லென்ற ஒரு உணர்வு வந்தது" என்று கூறினாள். மேலும் "இது என்னவாயிருக்கும்? சில்லென்ற, குளுமையாக நல்லுணர்வு உண்டாயிற்றே" என்று எண்ணினவளாய் தொடர்ந்து பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்தாள்.

சில நிமிடங்களில் உண்மையாகவே அவளுக்கு பசி எடுத்தது. ஆகவே அவள் மேஜை அருகே சென்று பிள்ளைகள் சிறிது உணவை பாத்திரத்தில் விட்டுவிட்டிருந்தனர். ஆகவே கரண்டியில் அந்த உணவை எடுத்து சிறிது சுவைத்து "நல்லது, இன்னும் சில நிமிடங்களில் எப்போதும் போல வாந்தி எடுத்துவிடுவேன்" என்று எண்ணி, எப்போதும் போல இருந்துவிட்டாள். முதலாவதாக காரியம் என்னவென்று உனக்குத் தெரியுமா? எல்லாம் சரியாகிவிட்டது. அவள் முற்றிலும்

சுகமாகிவிட்டாள். ஆகவே அவள் மறுபடியும் சென்று அதை சுவைத்தாள். எல்லாம் சரியாகிவிட்டிருந்தது. உண்மையாகவே அவளுக்கு ஒரு உணவு யூபிலிக் கொண்டாட்டம் போல ஆகிவிட்டது. அவள் அங்குச் சென்று இரண்டு முட்டைகளை அவித்து, ஒரு பெரிய பீங்கான் தட்டில் வைத்து, ஒரு கப் காபி தயாரித்து அவள் உண்மையாகவே சாப்பிட ஆரம்பித்தாள். சிறிது நேரமாக பாத்திரங்களைக் கழுவிக் கொண்டே இருந்தாள். பிறகு அவள் காலூன்றி நின்று, சுகமாக இருப்பதை உணர்ந்தாள். அவள்

கைகளை உயர்த்தி தேவனைத் துதிக்க ஆரம்பித்தாள். என்ன நேர்ந்தது என்பதை தன் சகோதரிக்கு தெரியப்படுத்த வீதியில் ஓடினாள்.

அவள் அங்கு சென்றடைந்தபோது தரையில் நடந்து அந்த துணியை வேகமாக உதறிக் கொண்டிருந்த அந்த சிறிய ஸ்திரீ இவளைப் பார்த்து "நல்லது, சகோதரியே என்ன ஆயிற்று?",

"இதோ பார், அது என் கழுத்தை விட்டு அகன்றுவிட்டது. அதை என்னால் எங்குமே

காணமுடியவில்லை” என்று கூறினாள். அது போய்விட்டிருந்தது.

அது என்ன? “ஏனெனில் அவர்கள் முடியாது இல்லை” என்ற பதிலுக்கு காத்திராமல் தேவனுடைய வார்த்தையின் ஆறாவது புலனின் மேல் அவர்கள் இருவரும் சார்ந்திருந்தனர். அதற்கு பிறகு இரண்டு மாதங்கள் கழித்து அவர்கள் கூட்டங்களுக்கு வந்து தாங்கள் எப்படி சுகமாயினர் என்பதை எனக்கு காண்பித்தனர். அதுஎன்ன? அந்த ஆறாவது புலன், அவர்களை இரட்சித்து மீட்டெடுத்த வல்லமையின் புலன், நான்

**ஜெபித்ததினால் அல்ல, அவர்கள் விசுவாசித்ததினால் தான். அதுதான். அதுதான் செய்தது.**



# அவர்கள் அவனைப் பார்த்து சிரிக்கத் தொடங்கினபோது, அவன் அதை நிறுத்தியிருந்தால் என்னவாகியிருக்கும்?



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# 6

*செய்தி:* **கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது**, ஆகஸ்டு 22, 1950, கூடார கூட்டம், கிளிவ்லாண்ட், ஒஹியோ, அமெரிக்கா

இப்பொழுது சற்று பொறுங்கள். அவர்கள் ஜெப வரிசையை அழைக்கப் போகையில், ஹூஸ்டன், டெக்ஸாஸில் உள்ள ஒரு சிறிய மனிதர் சமீபத்தில் இந்த மேடையினூடாகக் கடந்து சென்றார். அவர்... நாங்கள் ஒரு (ஜெப) வரிசையைக் கொண்டிருந்தோம், நாம் கடந்த இரவில் செய்தது போன்று, அதனூடாக வந்து கொண்டிருந்து, "தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக" என்று கூறி, ஒரு சிறு ஜெபத்தைக் கொண்டிருந்தார். அவர் அதனூடாகக் கடந்து சென்றார், அவர்-அவர் இவ்விதமாக வெட்டியிழுத்துக் கொண்டிருந்தார். பிறகு அதனூடாகக் கடந்து போய் விட்டார்.

அங்கே கீழே, ஒரு மெதுவான வரிசையில் ஒரு பெண்மணி இருந்தாள், அவள் ஒரு குரல்வளை சுரப்பியில் ஏற்படும் வீக்கத்திலிருந்து (goiter) சுகமடைந்தாள். அவள் ஒரு குடையை வைத்திருந்து, தெருவில் மேலும் கீழும் நடந்தவாறு,

பலமாகக் கத்திக் கொண்டே போய்க் கொண்டிருந்தாள்.

49. சிறு மனிதர் அருகில் கடந்து சென்றார். நான், "என்னுடைய சகோதரனே, தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக, நீர் விசுவாசிக்கிறீரா?" என்று கேட்டேன்.

அவர், "என்னுடைய முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறேன்" என்றார்.

நான், "இப்பொழுது வீட்டிற்குச் செல்லும்... உம்முடைய விசுவாசம் உம்மை சுகமாக்கும்" என்று கூறினேன், (அவர்) இவ்விதமாக தொடர்ந்து அருகே கடந்து போய் விட்டார். இதோ அவர் வரிசையில் திரும்பவும் வந்தார். அவர், "சகோதரன் பிரன்ஹாமே, நான் சுகமடைந்து விட்டேன் என்று நீர்-நீர்-நீர் என்னிடம் கூறினீர். நான் இன்னும் திடீர் ஆட்டம் கொண்டவனாகத்தானே இருக்கிறேன்" என்றார்.

நான், "சகோதரனே, நீர் என்னை விசுவாசிப்பதாகச் சொன்னீரே" என்றேன்.

அவரும், "நான் விசுவாசிக்கிறேன்" என்றார்.

**நான், “நீர் அதைப்போன்று நடிக்க வேண்டாம். நான் என்ன கூறினேனோ அதை நீர் விசுவாசிக்க வேண்டும்” என்றேன்.**

அவர், “நல்லது, நான் அதை விசுவாசிக்கிறேன்” என்றார்.

நான், “நல்லது, நீர் ஏன் திரும்பி வந்து, நீர் சுகமடையவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்? அது எவ்வளவு எளிது என்று பார்?” என்றேன்.

அவர், “நல்லது, சகோதரன் பிரன்ஹாமே, அப்படியானால் நான் சுகமடைந்து விட்டேனா?” என்று கேட்டார்.

நான், “ஆம், ஐயா. நீங்கள் சுகமடைந்து விட்டீர்கள் என்று நீர் விசுவாசிக்கிறபடியே. அவர் என்னுடைய ஜெபத்தைக் கேட்டுவிட்டார் என்று விசுவாசிக்கிறீரா? நான் ஜெபிக்கும்போது, உத்தமமாயிருந்து, ஜனங்கள் என்னை நம்பும்படி செய்தால், ஜெபத்திற்கு முன்பாக எதுவும் நிற்காது என்று அவர் என்னிடம் சொன்னாரே. நீர் அதை விசுவாசிக்கிறீரா?” என்றேன்.

“ஆம், ஐயா. நான் அதை என்னுடைய முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறேன்” என்றார்.

நான், "தொடர்ந்து போய்க்கொண்டேயிரு" என்றேன்.

அவர், "சரி" என்று சொல்லிவிட்டு, அங்கிருந்து போகத் துவங்கினார். ஒரு சில நிமிடங்களில், இதோ அவர் வரிசையினூடாகத் திரும்பி வந்து, "எனக்கு இது இன்னும் நிற்கவில்லையே, சகோதரன் பிரன்ஹாமே" என்றார்.

**நான், "நல்லது இப்பொழுது, இதோ பார். இப்பொழுது உனக்கு எப்போது நிற்கும் என்பதைக் குறித்து நான் பேசிக் கொண்டிருக்கவில்லை. ஒரு வாரத்திற்கு உனக்கு நிற்காமல் இருக்கலாம், அல்லது பத்து நாட்களுக்கோ, அல்லது மூன்று மாதங்களுக்கோ, அல்லது நான்கு மாதங்களுக்கோ, அல்லது இரண்டு வருடங்களுக்கோ உனக்கு நிற்காமல் இருக்கலாம். ஆபிரகாம் அவனுடையதின் பேரில் இருபத்தைந்து வருடங்கள் காத்திருந்தான்" என்று கூறினேன்.** பாருங்கள்? அது சரிதானா? வேதப்பூர்வமாக அதை நீங்கள் அறிவீர்கள். நான்,

"நான் உன்னிடம் கூறினதை நீ விசுவாசி" என்று கூறினேன்.

அவர், "சகோதரன் பிரன்ஹாமே, எனக்கு இது புரியவில்லையே" என்றார்.

நான், "சகோதரனே, நான் சத்தியத்தையே கூறினேன் என்று அறிவித்துக் கொண்டிருக்கிற தேவனுடைய தூதனானவர் தான் இதையும் என்னிடம் கூறினார். ஜனங்கள் என்னை நம்பும்படி என்னால் செய்து, உத்தமமாக இருக்க முடியுமானால், நான் ஜெபிக்கும்போது..." என்றேன்.

"ஓ, எனக்கு அது புரிகிறது. நீர் என்ன கூற வருகிறீர் என்பது எனக்குப் புரிகிறது." "நான்-நான்-**நான் ஏற்கனவே சுகமடைந்து விட்டேன், நான் அது நிற்பதற்காக காத்துக் கொண்டிருக்கிறேன்"** **என்றார்.**

நான், "அதுதான் சரி" என்றேன்.

"சரி" என்று கூறிவிட்டு, "நான் சுகமானேன்" என்று கூறினார். அப்படியே தொடர்ந்து சென்று கொண்டிருந்தார், உங்களுக்குத் தெரியும், **தொடர்ந்து, "தேவனுக்குத் துதி உண்டாவதாக, நான் சுகமடைந்து விட்டேன்" என்றார்.**

50. ஏறக்குறைய ஒரு மாதம், அல்லது இரண்டு மாதம் கழித்து, ஒருக்கால் ஏறக்குறைய நிச்சயமாக ஆறு வாரங்கள் இருக்க வேண்டுமென்று நான் சொல்லுவேன், நான் வேறொரு கூட்டத்தில் இருந்தேன். ஒரு ஒலிபரப்பை விட்டு, ஸ்டுடியோவை விட்டு வெளியே வந்தேன், அது அந்த அரங்கத்தில் இருந்தது, நான் அங்கே வெளியே நடந்து சென்றேன், மேலும் ஒரு தொலைபேசி... வாயில் காப்போன் அங்கே நின்று கொண்டிருந்து, "உமக்கு-உமக்கு தொலைபேசி அழைப்பு வந்திருக்கிறது. அது இந்தியானாவிலிருந்து, உம்முடைய சொந்த வீட்டிலிருந்து வந்திருக்கிறது" என்றார்.

நல்லது, அது ஜெபர்ஸன்வில் என்பதற்குப் பதிலாக அங்கேயிருந்த இந்தியானாபோலிஸில் இருக்கும்படி நேரிட்டது. ஒரு சீமாட்டி, "நீர் ஒரு தெய்வீக சுகமளிப்பவரா?" என்று கேட்டாள்.

நான், "இல்லை, பெருமாட்டியே. நான் சகோதரன் பிரன்ஹாம்" என்றேன்.

அவள், "நல்லது, அதோ பாரும், நான் ஒரு...ஐக் கொண்டிருந்தேன். நான் இங்கே இந்தியானாபோலிஸிலிருந்து, இந்தியானாவிலிருந்து வருகிறேன். ஒவ்வொரு வருடமும் என்னுடைய

சகோதரியோடு ஹாஸ்டலில் தன்னுடைய விடுமுறைக்காக போய் தங்கும் ஒரு-ஒரு மகன் எனக்கு இருந்தான். அவனுக்கு முடக்கு வாதம் இருந்தது. அவன் ஒரு குழந்தையாக இருந்த போதே, அவன் விழுந்து, ஒருவித காயமடைந்தான். அவனுக்கு வருடக்கணக்காக முடக்குவாதம் இருந்தது. ஒருசில வாரங்களுக்கு முன்னால், அவன் இங்கே வீட்டிற்கு வந்து, ஏதோவொரு தெய்வீக சுகமளிப்பவர் அவனைச் சுகப்படுத்தி விட்டதாகக் கூறிக் கொண்டிருந்தான். **அவன் அப்படியே இங்கே சுற்றிலும் சென்று,** '**கர்த்தருக்குத் துதி உண்டாவதாக, அவர் சுகப்படுத்தி விட்டார்**' **என்று உரக்க கத்திக் கொண்டிருந்தான்,** மற்றும் அதைப்போன்ற மற்ற எல்லாவற்றையும் செய்தான். அவன் மொத்த சுற்றுப்புறத்தாரையும் மிகவும் நிலைக்குலையப் பண்ணிக் கொண்டிருந்தான். ஏன், அங்கே அந்தப் பையனில் எந்த வித்தியாசமும் இல்லை. அவன்... நாங்கள் அவனிடம் கூறினோம், இப்பொழுது, நாங்கள் கிறிஸ்தவ ஜனங்கள்" என்றாள்.

அவன், "ஆனால் அம்மா, குருடான ஜனங்கள் காண்பதையும், செவிடான ஜனங்கள் கேட்பதையும், முடவர்கள் நடந்து செல்வதையும் நான்-நான் பார்த்தேன். அந்த வரிசையினூடாக

கடந்து சென்றபோது, நான் சுகமடைந்து விட்டேன் என்று விசுவாசிக்கும்படி அவர் என்னிடம் கூறினார். தூதனானவர் அதை அவரிடம் கூறினதாக அவர் சொன்னார். சரியாக இருக்கிற மற்ற காரியங்களின் பேரில் தூதனானவர் அவரிடம் என்ன சொன்னாரோ அது சரியாகவே இருக்கிறது. நானும் சுகமடைந்து விட்டேன். நான் வித்தியாசமான எதையும் கூறும்படி யாருமே செய்யப்போவதில்லை. நான் சரியாக அதனோடு நிற்கப் போகிறேன்" என்றான். அவன் அப்படியே தொடர்ந்து போய்க்கொண்டிருந்தான்.

51. அவள், "அவன் அநேக வாரங்களாக அவ்வாறு சொல்லிக் கொண்டிருந்தான். **அவன் வந்து, ஒரு நாற்காலியில் அமர்ந்து, 'நல்லது, என்னைச் சுகப்படுத்தினதற்காக தேவனுக்கு நன்றி' என்று கூறிவிட்டு, அவனால் எவ்வளவு கடுமையாக நடுங்க முடியுமோ அவ்வளவு கடுமையாக ஆடிக்கொண்டிருப்பான்**" என்றாள்.

"ஜனங்கள்... ஏன், அவன் நிந்திக்கப்பட்டான். அண்டை வீட்டுக்காரர்கள் அவனைப் பார்த்து சிரித்தார்கள். அவர்கள் எல்லாரும், 'நல்லது, அவன் சுகமடைந்து விட்டதாக நினைக்கிறேன். அதோ அவன் போகிறான். அவன்

ஆடிக்கொண்டிருப்பதைப் பாருங்கள். இப்பொழுது, யாரோ ஒருவர் இதைப்போன்ற யாரோ ஒருவரை ஏமாற்றுவது என்பது ஒரு அவமானமாக இல்லையா?' அதைப்போன்று (கூறினார்கள்). 'இது ஒரு அவமானமாக இல்லையா?' என்று அண்டை வீட்டார் கூறினார்கள். 'நல்லது, அந்தப் பையனிடம் அதைக் கூறினதற்காக, அந்தப் பேர்வழியை கைதுசெய்து, நாட்டைவிட்டே துரத்த வேண்டும்' என்று அதைப் போன்று கூறினார்கள்" என்றாள்.

52. நான் சத்தியத்தைக் கூறியிருந்தால், அது அவ்விதமே இருக்க வேண்டும். அது சரியே. ஆனால் அது சத்தியம் தான். எனவே அது தொடர்ந்து போய்க்கொண்டேயிருந்தது. அவள், "அவன்..." என்றாள். அவன் இரண்டாவது முறை திரும்பி வந்தபோது (நான் உங்களிடம் கூற மறந்துவிட்டேன்), அவன், "சகோதரன் பிரன்ஹாமே, நீர் என்னைச் சுகப்படுத்துவீரானால், நான் சரியாக இப்பொழுதே நூறு டாலர்கள் தொகையை உமக்குத் தருவேன்" என்றான்.

**அதற்கு நான், "நீர் எனக்கு பத்து லட்சம் டாலர்கள் கொடுத்தாலும், என்னால் உன்னைச் சுகப்படுத்த முடியாது" என்று கூறினேன்.**

அதன்பிறகு அவன், "முன்கழுத்துக் கழலையை உடைய அந்த ஸ்திரீயைக் குறித்து என்ன?" என்று கேட்டான்.

நான், "சகோதரனே, கிறிஸ்துவிலுள்ள அவளுடைய விசுவாசம் தான் அவளைச் சுகப்படுத்தினது" என்றேன்.

எனவே அவள், "நல்லது இப்பொழுது. அவன் அதைச் செய்து கொண்டிருந்தான்" என்றாள். அவன், "கடந்த சனிக்கிழமை... சென்ற வெள்ளிக்கிழமை மாலையில், பிற்பகல் (என்று நினைக்கிறேன்) அவன் உள்ளே வந்தான். ஆனால் வெளியே தேசத்திலிருந்து வந்த எங்கள்-எங்கள் நண்பர்களில் ஒருவர் எங்களைக் காண வந்தார், **அவன் உள்ளே வந்து, ஆடிக்கொண்டே (வெட்டி இழுத்தவண்ணமே) இருந்து**, **நாற்காலியில் உட்கார்ந்து, '*என்னைச் சுகப்படுத்தினதற்காக கர்த்தருக்கு துதி உண்டாவதாக*' என்றான்"** என்று கூறி(னாள்).

"நாட்டிலிருந்து வந்திருந்த என்னுடைய உறவினர், 'அவனுக்கு என்ன காரியம்' என்றார்" என்று கூறினாள்.

"ஓ," "அவன் அங்கே சென்றான், ஏதோவொரு பிரசங்கியார் அவனைப் பிடித்து, அவனை முழுவதும் உணர்ச்சிவசப்படுத்தி (worked up), அவன் சுகமடைந்து விட்டதாக அவனிடம் கூறினார். அதுமுதற்கொண்டு, இவன் இவ்விதமாக நடந்து கொள்கிறான். அவன்... பெற்றுக்கொள்வதற்கு முன்" என்றாள்.

அவன், "நல்லது, நான்-நான் சுகமடைந்து விட்டேன். நான்..." என்றான்.

"ஓ," அவள் சொன்னாள்... அவனைப் பார்த்து சிரிக்க வேண்டியிருந்தது, உங்களுக்குத் தெரியும். எனவே அதன்பிறகு, அவன் அவ்வாறு சொல்லுவதை நிறுத்தும்படிக்கு தாயார் அவனைப் பார்த்து சிரிக்க வேண்டியிருந்தது, உங்களுக்குத் தெரியும். "அது ஒரு நிந்தையைக் கொண்டு வந்து கொண்டிருந்தது" என்றாள்.

**கிறிஸ்து எதற்காக எல்வாரியில் மரித்தாரோ அதற்காக சாட்சிகூறுவது ஒரு நிந்தையை ஒருபோதும் கொண்டுவரவே வராது. இல்லை, ஐயா. அவர் கல்வாரியில் மரித்தபோதே அவர் ஒவ்வொரு நபரையும் சுகப்படுத்தி விட்டார்.**

**அவர் அதைச் செய்து விட்டார். அது சரியே. நீங்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.**

53. அதன்பிறகு இந்த... நல்லது, **அவள், "அவன் நாற்காலியில் உட்கார்ந்தான். அவன் அவ்விதமாக ஆடிக்கொண்டுதான் இருந்தான், தொடர்ந்து ஆடிக்கொண்டேயிருந்தான். அவன் அழுது கொண்டிருக்க வேண்டியிருந்தது. நாங்கள் அவனைப் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தோம்"** என்றாள்.

தொடர்ந்து அவள், "**அப்போது திடீரென்று, அவன் தன்னுடைய காலில் குதித்தான், அவனால் எவ்வளவு கூடுமோ அவ்வளவு அந்த நடுக்கம் நின்று, ஆடுவது நின்றுவிட்டது. இப்பொழுது, நான் சுகமடைந்து விட்டேன்" என்றான்.** அது சரியே. **தேவனே அவனிடம் விஜயம் செய்திருந்தார்.**

அவள், "சங்கை பிரன்ஹாமே அவர்களே, நாங்கள் அவனை ஒரு நாற்காலியில் இருத்தி,

**அதை நிச்சயப்படுத்தும்படிக்கு மணிநேரங்களாக அங்கேயே அவனை இருத்தினோம், அவனுக்கு சற்றும் நடுக்கம் இல்லவேயில்லை.** நாங்கள் அவனை எங்கள் சபைக்கு, மிகவும் பிரபலமான ஒரு பாப்டிஸ்டு சபைக்கு அழைத்துச் சென்றோம்" என்றாள். அது இங்கிருந்து சரியாக இதினூடாக ஒலிபரப்பப்படுகிறது. தொடர்ந்து அவள், "நாங்கள் அவனை சபைக்கு அழைத்துச் சென்றோம், அந்த மேய்ப்பர் அவனை உற்றுப்பார்த்துவிட்டு, 'அங்கே எந்த...?... அது உண்மைதான்' என்று கூறினார். அதன்பிறகு நாங்கள் அவனை மருத்துவரிடம் அழைத்துச் சென்றோம். அவரும், 'அங்கே எந்தத் தவறும் இல்லை" என்று கூறினார். இப்பொழுது, இது ஞாயிற்றுக்கிழமை, அவன் இன்னும்...?..." என்றாள்.

"ஏன், நான் சுகமடைந்து விட்டேன் என்று நான் உம்மிடம் கூறினேன்." ...?...

அவள், "இப்பொழுது, உமக்கு நூறு டாலர்கள் (தருவதாக) அவன் வாக்குப்பண்ணியிருந்தான், அதை எங்கே அனுப்ப வேண்டுமென்று அறிய விரும்புகிறேன்" என்றாள்.

அதற்கு நான், "ஓ, சகோதரியே... அவன் ஒரு பணக்காரனாக இருந்தால், அந்தப் பணத்தைக் கொண்டு என்ன செய்வது என்றே அறியாமல் இருக்கும் அளவுக்கு அதிக பணம் அவனிடம் இருக்கும். தெருவில் சென்று, அவன் முதலாவது காணும் கந்தை துணி அணிந்திருக்கும் சிறு பிள்ளைக்காக, அவன் உள்ளே சென்று, அந்தப் பிள்ளைக்கு நிறைய துணிகளை வாங்கிக்கொடு, அந்தக் குழந்தைக்கு அதை, ஏதோவொன்றைக் கொடு. அவர் சுகம் கொடுத்ததற்காக, தேவனுக்கு துதியை செலுத்து" என்றேன், (அது சரியே.)

54. இப்பொழுது, அது என்னவாக இருந்தது... **அவர்கள் அவனைப் பார்த்து சிரிக்கத் தொடங்கினபோது, அவன் அதை நிறுத்தியிருந்தால் என்னவாகியிருக்கும்? நீங்கள் சரியாக அதனோடு தரித்திருங்கள்... நீங்கள் அதை விசுவாசிப்பீர்களானால், சரியாக அங்கேயே தரித்திருங்கள், நீங்கள் தரித்திருப்பதை நிறுத்தி விடாதீர்கள். சரியாக அங்கேயே தரித்திருங்கள், அப்பொழுது தேவன் அதைச் சரியாக ஆக்குவார்.**

# அவள் சரியான வழியில் பயபக்தியோடு அணுகினாள், அவள் எதைக் கேட்டாளோ அதைப் பெற்றுக் கொண்டாள்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: ஆபிரகாமோடு தேவனுடைய உடன்படிக்கை

## (GOD'S COVENANT WITH ABRAHAM)

சனிக்கிழமை மாலை, ஏப்ரல் 28, 1956
சம்பூரண ஜீவ மையம், சார்லெட்,
வட கரோலினா, அமெரிக்கா
56-0428

4. மேலும் இப்பொழுது, இங்கே கைக்குட்டைகள் இருப்பதை நான் காண்கிறேன். இதை விசுவாசிப்பதற்கு உங்களுக்கு விசுவாசம் உண்டு என்பதைக் குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அந்த அபிஷேகமானது... இப்பொழுது, அநேக ஜனங்கள்,

கைக்குட்டைகளை அபிஷேகிக்கின்றனர் (anoint), அவர்கள் என்னிடம், “சகோதரன் பிரன்ஹாமே, நீர் என்னுடைய கைக்குட்டையை அபிஷேகிப்பீரா?” என்று கூறுகிறார்கள்.

5. இப்பொழுது, அதெல்லாம் சரிதான், அது அருமையானது. கர்த்தர் செய்கிறதும் ஆசீர்வதிக்கிறதுமான எதுவாக இருந்தாலும், நான் உண்மையிலேயே அதற்காக இருக்கிறேன். ஆனால், நீங்கள் எனக்குச் சாட்சி கொடுப்பீர்களானால், நீங்கள் அப்போஸ்தலர் நடபடிகளின் புஸ்தகத்தின் 19-வது

அதிகாரத்திலிருந்து அந்த வேதபாகத்தை எடுக்கிறீர்கள் என்று நம்புகிறேன். இப்பொழுது, பவுல் ஒருபோதும் கைக்குட்டைகளை அபிஷேகிக்கவில்லை; அவர்கள் உறுமால்களையும் (handkerchiefs) கச்சைகளையும் பவுலினுடைய சரீரத்திலிருந்து எடுத்தனர்.

6. இப்பொழுது, எத்தனை பேர் (அதைக் குறித்து) நினைக்க விரும்புகிறீர்கள்... அல்லது, வேதபிரகாரமாக, பவுல் இதை எங்கிருந்து பெற்றான் என்று நான் நினைக்கிறதை வெளிப்படையாகக் கூற வேண்டுமென்று விரும்புவீர்கள்? அதை விரும்புவீர்களா? சரி, அவன் அதை

எங்கிருந்து பெற்றான் என்று நான் எண்ணுகிறேன் என்பதை நான் உங்களுக்குக் கூறப்போகிறேன்.

7. வேதாகமத்தில், எலியா சூனேமிய ஸ்திரீயிடம் அவள் ஒரு குமாரனைப் பெறப் போகிறாள் என்று கூறின போது, அவள் அவ்விதமே குமாரனைப் பெற்றாள். அவளுடைய மகனுக்கு ஏறக்குறைய 12 வயதாக இருக்கும் போது, ஒரு நாளில், அவன் வெளியில், அறுவடை செய்யப்படுகிற வயலில், தன்னுடைய தகப்பனோடு நாள் முழுவதும் இருந்தான், அவனுக்கு அநேகமாக சூரிய வெப்பத் தாக்குதல் உண்டாகியிருக்க வேண்டும், அவன், “என் தலை

நோகிறது" என்று உரக்கக்கத்தத் துவங்கினான்.

8. ஒரு வேலைக்காரன் அவனை வீட்டிற்கு எடுத்துச் சென்று, அவனுடைய தாயாரின் மடியில் கிடத்தினான், மத்தியானம் மட்டும் இருந்து அவன் மரித்துப் போனான். அவள் இந்த தீர்க்கதரிசியை மகிழ்விப்பதற்காக தன்னுடைய வீட்டின் பக்கத்தில் ஒரு சிறிய இடத்தைக் கட்டியிருந்தாள். ஆகவே, அவள் அவனை எடுத்து, தீர்க்கதரிசியின் படுக்கையில் அவனைக் கிடத்தினாள். கழுதையின் மேல் சேணம் வைக்கும்படியாக ஒரு வேலைக்காரனை அவள்

கொண்டிருந்து, அவள் நேராக கர்மேல் பர்வதத்திற்குப் போனாள்.

9. அந்த ஸ்திரீ நடந்து கொண்ட விதம் எனக்கு பிடிக்கும், ஒரு நெருக்கடியான நிலையில் இருந்த ஒரு ஸ்திரீ, ஆனால் அவளுடைய விசுவாசமானது இன்னும் தேவனிடத்தில் அசையாததாக இருந்தது. அவளால் இந்த தேவனுடைய மனுஷனிடத்தில் போகக் கூடுமானால், அவளுடைய பிரச்சனை என்னவென்பதை அவள் கண்டுபிடித்து விடுவாள் என்பது அவளுக்குத் தெரிந்திருந்தது. ஆகவே, அவள் அங்கு சென்றாள், அவள் எலியாவைக் கண்ட போது... எலியா அவள் வருவதைக்

கண்டபோது... இப்பொழுது, தேவன் எப்போதுமே தாம் செய்யப் போகிற யாவற்றையும் தம்முடைய ஊழியக்காரர்களுக்குக் கூறுவதில்லை. அவர் தாம் செய்ய விரும்புவதின் பாகத்தைத்தான் அவர்களுக்குக் கூறுகிறார். ஆகவே, இந்தக் காரியத்தைக் குறித்து எலியா ஒருபோதும் தேவனிடமிருந்து கேள்விப்பட்டிருக்கவில்லை. அகவே, அவன், “இங்கே சூனேமியாள் வருகிறாள், அவளுக்குப் பிரச்சனை உள்ளது, தேவன் அதை என்னிடமிருந்து இரகசியமாக வைத்திருக்கிறார்” என்றான். “போய் அவளிடம் கேள்” என்றான்.

10. அவனுடைய வேலைக்காரனாகிய கேயாசி விஷயத்தைக் கேட்டறிந்து கொள்வதற்காக ஓடிச் சென்றான். அவன், "நீ சுகமாயிருக்கிறாயா? உன்னுடைய புருஷன் சுகமாயிருக்கிறானா? உன்னுடைய பிள்ளை சுகமாயிருக்கிறதா?" என்று கேட்டான்.

11. இப்பொழுது, கவனியுங்கள். அந்த பிள்ளை ஒரு சவமாகக் கிடக்க, அவளுடைய புருஷன் பதறலோடு இருக்க, கழுத்து முறியும்படியான வேகத்தில் சவாரி செய்து வர, அவள், "எல்லாரும் சுகம் தான்" என்றாள். அது எனக்குப் பிடிக்கும். அவள்

கர்த்தருடைய ஊழியக்காரனுக்கு முன்னே இருந்தாள்.

12. மரியாள் செய்த விதமாக - இயேசுவை சந்திப்பதற்கான கருத்தை அவள் இங்கு தான் பெற்றுக் கொண்டாள் என்று நினைக்கிறேன். “கர்த்தாவே, நீர் இங்கே இருந்தீரானால், என் சகோதரன் மரித்திருக்க மாட்டான், இப்பொழுதும், நீர் தேவனிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ, அதை தேவன் செய்வார்” என்றாள், பாருங்கள்.

13. தேவன் தம்முடைய தீர்க்கதரிசிக்குள் இருந்தாரானால், அவர் நிச்சயமாகவே தம்முடைய

குமாரனுக்குள்ளும் இருந்தார் என்பதை அவள் அறிந்திருந்தாள். ஆகவே, அவள் சரியான வழியில் பயபக்தியோடு அணுகினாள், அவள் எதைக் கேட்டாளோ அதைப் பெற்றுக் கொண்டாள். அதன் காரணமாகத்தான் இன்று நாம் எதைக் கேட்கிறோமோ அதைப் பெற்றுக் கொள்வதில்லை: நாம் தவறான வழியில் அணுகுகிறோம். நாம் ஒரு... அணுக வேண்டும். “தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைக் விடாமுயற்சியுடன் தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவர் என்றும் விசுவாசிக்க வேண்டும்.”

14. இப்பொழுது, எலியா, பிறகு அந்த ஸ்திரீ ஓடி... நல்லது, எல்லாரும் சுகமாயிருந்தால், அவளுக்கு என்ன பிரச்சனை உள்ளது, அவள் எதைக் குறித்து நிலைகுலைந்து போயிருக்கிறாள்? அவள் ஓடிச் சென்று, அவனுடைய காலில் விழுந்து, என்ன சம்பவித்தது என்பதை அவனிடம் கூறத்தொடங்கினாள். இப்பொழுது அவன் என்ன செய்தான் என்பதைக் கவனியுங்கள். அவன் தன்னுடைய வேலைக்காரனாகிய கேயாசியிடம், "நீ உன் இடையைக் கட்டிக் கொண்டு, நான் பிடித்திருக்கிற தடியை - இந்தத் தடியை எடுத்துக் கொண்டு,

அவளுக்கு முன்னே ஓடிப்போ, யாராவது உன்னிடம் பேசினால், மறுமொழி சொல்லாதே, நீ உள்ளே சென்று அந்தத் தடியை பிள்ளையின் மேல் வை" என்றான்.

15. இதைப் பெற்றுக் கொண்டீர்களா? அவன் கையாண்டிருந்த விதம் என்ன. பாருங்கள், அவன் தொட்டது எதுவோ அது அசீர்வதிக்கப்பட்டிருந்தது என்பதை அவன் அறிந்திருந்தான். இந்த ஸ்திரீ மாத்திரம் அதே காரியத்தை விசுவாசிக்கக் கூடுமானால்!

16. பவுல் அங்கே தான் அதைப் பெற்றுக் கொண்டான் என்று

நினைக்கிறேன், அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களை எடுத்து, ஜனங்களிடம் அனுப்பினான். இப்பொழுது, பரிசுத்த பவுல் போய் விட்டான் என்பதை நாம் அறிவோம்; அவன் இன்றிரவு இயேசுவோடு இருக்கிறான். பவுல் போய் விட்டான், நாம் பரிசுத்த பவுல் அல்ல, ஆனால் அவர் இன்னும் இயேசுவாக இருக்கிறார், அவர் அவர்களுடைய விசுவாசத்திற்குக் கடமைப்பட்டிருந்தது போல உங்களுடைய விசுவாசத்திற்கும் கடமைப்பட்டிருக்கிறார்.

## ~ 15 ~

(இந்தப் புத்தகம் சரிபார்ப்பில் உள்ளது)



# தேவன் இன்றிரவும் ஒரு பரிகாரத்தை வைத்திருக்கிறார்



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

## *செய்தி:* தேவனால் அருளப்பட்ட பாதை, டிசம்பர் 1, 1953

166. அங்கே இஸ்ரவேலர்கள் அதனூடாகப் போகையில், என்னால் அவர்களைக் காண முடிகிறது. முதலாவது காரியம் என்னவென்று தெரியுமா, அங்கே வெளியே அவர்களுக்கு எந்த பரிகாரமும் இல்லாதிருந்தது. வைத்தியனாகிய மோசேயினால் (Dr. Moses) சரியானவிதமாய் இருந்த ஒரு ஊனீரை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது, இந்நிலையில் அவர்கள் சில பாம்பு கடிகளை உடையவர்களாயிருந்தார்கள், எனவே தேவன் ஒரு வழியை அருளினார். அது சரிதானா? அவன் ஒரு சர்ப்பத்தை உண்டாக்கினான், அவன் அதை வெண்கலத்தினால் உண்டுபண்ணி, அதை ஒரு கம்பத்தின் மேல் வைத்தான். ஜனங்கள் செய்ய வேண்டியிருந்த ஒரே காரியம் என்னவென்றால், சென்று, அந்தக் கம்பத்தை, அந்தக் கம்பத்தின் மேலிருந்த அந்த சர்ப்பத்தைப் பார்த்து, தேவன் தான் அதை அங்கே மேலே வைத்தார் என்று விசுவாசிப்பது தான், அப்பொழுது அவர்கள் சுகமடைந்தார்கள்.

167. அவர்களில் சிலர், "நல்லது, என்னால் சில பாம்புகடி விஷத்திற்கு மருந்தாக உள்ள சில பச்சிலைகள் (snakeroot) எனக்குக் கிடைக்கக் கூடுமா என்று நான் பார்க்கும்படி இங்கே போகிறேன், என்னால் அதை வைக்க முடியுமா என்று பார்க்கப் போகிறேன் என்று கூறினார்கள்.

168. மற்றவன், "நல்லது, ஜான், நீ எங்கே போய்க் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான்.

169. "பாம்புக்கடி விஷமருந்து பச்சிலைகள் (snakeroot) கொஞ்சம் எடுத்து, இங்கே அதை வைத்து, அது சுகமடையுமா என்று பார்க்கப் போகிறேன்" என்று கூறினான்.

170. (இவனோ), "நான் தேவனுடைய வழியை ஏற்றுக்கொண்டு, சர்ப்பத்தை நோக்கிப் பார்த்துப் பிழைக்கப் போகிறேன்" என்றான்.

171. இவன் பிழைத்துக்கொண்டான்; பாம்புக்கடி விஷமருந்து பச்சிலைகள் (snakeroot) தோல்வியடைந்து விட்டன. ஆமென்.

172. தேவன் இன்றிரவும் ஒரு பரிகாரத்தை வைத்திருக்கிறார். அல்லேலூயா! அது பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலமாக, அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவாக

இருக்கிறது. நான் பைத்தியக்காரன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். ஒருக்கால் நான் இருக்கலாம். நான் அவ்வாறு இருந்தால், நான் சந்தோஷமாக இருக்கிறேன். எனவே நான் வேறுவிதமாக இருந்ததைக் காட்டிலும், இந்தவிதமாக இருப்பதிலேயே அதிக சந்தோஷமாயிருக்கிறேன், எனவே அப்படியே... நான் இவ்விதமாக இருப்பதையே அதிகம் விரும்புகிறேன். பாருங்கள்? எனவே நான்-நான் அப்படியே அற்புதமாக உணருகிறேன். சரி. ஆம், ஐயா. தேவன் ஒரு அருளப்பட்ட பாதையை உடையவராயிருந்தார்.

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*











# மருத்துவர் என்ன சொல்கிறார் என்பதில் கவனம் கொள்ளாதீர்கள்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

இப்போது உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள். நீங்கள் எதைக் காண்கிறீர்கள், உங்கள் பகைஞனையா அல்லது உங்களுடைய இரட்சகரைப் பார்க்கிறீர்களா? இந்தக் காலை வேளையில் எதைக் காண்கிறீர்கள்? நீங்கள் வியாதியாயிருந்தால், உங்கள் மருத்துவர் கூறுகிறார்: "நீங்கள் சுகமடைய முடியாது" என்று, சிலுவையை நோக்கி உங்கள் கண்களை ஏறெடுங்கள், அங்கே அவர் நம்முடைய மீறுதல்களினிமித்தம் காயப்பட்டார், அவருடைய தழும்புகளால் குணமானோம். மருத்துவர் என்ன சொல்கிறார் என்பதில் கவனம் கொள்ளாதீர்கள்; அவர் விஞ்ஞானத்தின் மூலமாக கிரியை செய்கிறார். விசுவாசம் ஆவியோடும்

தேவனோடும் உள்ள பரிமாணத்தில் கிரியை செய்கிறது.

*விசுவாசத்தினாலே மோசே, 58-0720 M, பத்தி எண் E-51*

அது எவ்வளவு மந்தாரமாக காணப்பட்டாலும் சரி... "நல்லது, நான் இன்னுமாய் வியாதியுடையவன் போலக் காணப்படுகிறேன்" என்று கூறுகிறீர்கள். அது ஒன்றுமல்ல... அது தூதர்களுடைய இறக்கைகள் ஒன்று சேருவதாகும். அவ்வளவே. அது தேவன் ஆசீர்வாதத்தின் வடிவில் தோன்றுவதாகும். அது உங்களுக்கு மந்தாரமாய்க் காணப்படுகிறது. அதை உங்களுக்கு அருகில் இழுங்கள், அதை மறுபடியும் கவனியுங்கள். தேவன் அங்கு நின்று கொண்டு, அவருடைய

வார்த்தையைக் காக்கிறாரா இல்லையா எனபதைப் பாருங்கள்.

*தேவனைக் குறித்த நிச்சயம் உடையவர்களாயிருங்கள், 59-0125, பத்தி எண் 140*

★★★★★

*Only believe,*
*Only believe*
*All things are possible,*
*Only believe.*

சகோ. பினேகாஸ்
போன்: 8838623242, 9551855108